00192

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்- மட்டம் 3

இறுதிப் பரீட்சை - **2023/2024**

**LLU 3604** – அரசியலமைப்புச் சட்டம் I

காலம்: மூன்று மணித்தியாலங்கள்

**திகதி: 15th மே 2025** நேரம்: 01.30 - 04.30pm

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு** (08)

ஏதேனும் ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

வினா இலக்கம் 1 மற்றும் 2 பின்வரும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டது.

நெளரின் என்பது தெற்காசியாவில் அமைந்துள்ள ஒரு ஜனநாயகத் தீவு நாடாகும். நெளரின் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த திரு சாம் திடீரென உயிரிழந்ததைத் தொடர்ந்து, திரு சாமின் பதவிக்காலத்தின் மீதமுள்ள காலத்தை முடிக்க அப்போது பிரதமராக இருந்த திரு ரோமல், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையால் வாக்களிக்கப்பட்டு 2023இல் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். திரு ரோமலின் பதவிக்காலம் 2025 டிசம்பரில் முடிவடைவதாக இருந்த போதும், நாட்டின் நிதிச் சுமையை கருத்தில் கொண்டு, ஜனாதிபதி தேர்தலை ஒரு வருடத்திற்குத் தள்ளி வைக்க விருப்பம் உள்ளதாக, ஜனாதிபதி ரோமல் நாட்டிற்கு ஒரு சிறப்பு அறிக்கையினால் அறிவித்தார்.

ஜனாதிபதியின் சர்ச்சைக்குரிய இவ் அறிக்கை நெளரின் சிவில் சமுதாயத்தில் பெரும் எதிர்வினையை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, நெளரின் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர், ஒரு பொதுமன்றத்தில் இது குறித்து இவ்வாறு விமர்சித்தார்:

*"எந்த நபரும் தேர்தலைத் தள்ளிப் போடுவதன் மூலம் மக்களின் இறையாண்மை உரிமையைப் பறிக்க முயற்சித்தால், அவ் முயற்சிகள் ஆரம்பத்திலே தோற்கடிக்க வேண்டும்."*

இந்த அரசியல் சூழ்நிலை நாட்டின் பல பகுதிகளில் உள்ளூர்மட்ட போராட்டங்களை உருவாக்கியது. இந்த எதிர்ப்புகளை கட்டுப்படுத்துவதற்காக, ஜனாதிபதி ரோமல் நாட்டில் அவசர நிலை அறிவித்து, இராணுவப் படைகளை பயன்படுத்தி போராட்டங்களை கட்டுப்படுத்த பாதுகாப்பு பிரமுகர்களை அழைத்தார்.

மேலும், இந்தப் போராட்டங்களை கட்டுப்படுத்த தவறியதற்காக, தலைமைக் காவல்துறை மேற்பார்வையாளர் (Inspector General of Police - IGP) பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். அதற்குப் பிறகு திரு ரீகன் புதிய தலைமைக் காவல்துறை மேற்பார்வையாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். ஆனால் இந் நியமனத்தின் போது, அவர் மீது நெளரின் தேசிய சட்ட பல்கலைக்கழக மாணவர்களின் அமைதியான போராட்டத்தினை தாக்கியதற்கான அடிப்படை உரிமை வழக்கு நிலுவையில் இருந்தது.நெளரின் அரசின் எதிர்க்கட்சி, இந்த நியமனம் அரசியல் அமைப்புச் சபையின் (Constitutional Council) அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டதால், சட்டவிரோதமானது என குற்றம் சாட்டியது.

YSA எனும் இளைஞர் சமூக செயற்பாட்டாளர்கள் அமைப்பு, புதிய போலீஸ் தலைவரின் நியமனத்தின் மூலம் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி, நெளரின் உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதி ரோமலை எதிராளியாக குறித்து வழக்கு தாக்கல் செய்தனர்.

இதற்குப் பதிலளிக்கும்போது, ஜனாதிபதி ரோமல், தான் நெளரின் நிர்வாகத் தலைவர் என்பதால், தன்னை எதிராளியாக (respondent) நியமிக்க முடியாத வகையான சிறப்பு விருபாடு (Presidential Immunity) உண்டு என வாதமிட்டார்.

நெளரினின் அரசியலமைப்புச் சட்டம், இலங்கையின் 1978 அரசியலமைப்பிற்கு ஒத்ததாக கருதுக.

01.(அ) நெளரின் நாட்டில் மேலே கூறப்பட்ட நிகழ்வுகளுடன் தொடர்புடைய அரசியலமைப்பு மீறல்கள் எவை? தொடர்புடைய அரசியலமைப்பு உறுப்புரைகளை மேற்கோள் காட்டி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(ஆ). ஜனாதிபதி ரோமல் தனது சிறப்பு விருபாடு (Presidential Immunity) முன்னிறுத்தி வைத்துள்ள கோரிக்கையில் வெற்றிபெற முடியுமா என்பதை விவாதிக்கவும். உங்கள் பதிலை, பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் வழக்கு உதாரணங்களின் அடிப்படையில் ஆதரிக்க.

**(10 புள்ளிகள்)**

**(10 + 10 = 20 புள்ளிகள்)**

02. மேலுள்ள சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு, அரசியலமைப்புவாதத்தின் கோட்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டிய குறைந்தது மூன்று (03) நிகழ்வுகளை அடையாளம் காண்க.

உங்கள் விடையை, தொடர்புடைய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்கு உதாரணங்களுடன் ஆதரிக்க.

**20 புள்ளிகள்**

03. "பிரஜையின் வாக்குரிமை என்பது, வாக்காளர்களின் விருப்பத்தின் சுதந்திர வெளிப்பாட்டை உத்தரவாதம் அளிக்கும் ஒரு உண்மையான தேர்தலின் வாயிலாக தன்னுடைய பிரதிநிதிகளை சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் உள்ளடக்கியதாகும் — வெறும் தன்னுடைய விருப்பம் மட்டுமல்ல. ஆகவே, ஒரு பிரஜை சுதந்திரமான, சமமான மற்றும் ரகசியமான தேர்தலில் தனிப்பட்ட முறையில் வாக்களிக்கும் உரிமையை மட்டுமல்லாது, அவர் சேர்ந்துள்ள முழு வாக்காளர்கள் மண்டலத்தின் விருப்பத்தின் சுதந்திர வெளிப்பாட்டை உத்தரவாதம் அளிக்கும் ஒரு உண்மையான தேர்தலையும் எதிர்பார்க்கும் உரிமையையும் பெற்றுள்ளார்."
Egodawela v Dissanayake (2001) 1 SLR 177 (SC), பக்கம் 179

மேலுள்ள கூற்றின் அடிப்படையில், இலங்கையின் தேர்தல் முறையை உறுப்புரைகள் மற்றும் முக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**(20 புள்ளிகள்)**

04. "மூன்று கிளைகள் பரஸ்பர தனிமைப்படுத்தப்பட்ட பாத்திரங்களை மேற்கொள்கின்றன என்பது நவீன 'வலுவேறாக்க கோட்பாடு' (separation of powers) கோட்பாட்டால் ஏற்கப்படவில்லை. மாறாக, நல்லாட்சிக்காக ஒருங்கிணைந்த நிறுவன முயற்சி அவசியம் என நம்பப்படுகிறது. எனினும், அதிகாரப் பிரிவும், உழைப்பின் பிரிவும் கொண்டுவரும் நன்மைகள் ஏற்கப்படுகின்றன, ஏனெனில் மூன்று கிளைகளுக்கும் அரசியலமைப்பால் வரையறுக்கப்பட்ட தனித்தனி பாத்திரங்கள் மற்றும் செயல்பாடுகள் உண்டு. ஒவ்வொரு நிறுவனமும் தங்களுக்குரிய அதிகாரவரம்புக்குள் செயல்பட வேண்டும்; மற்ற கிளைகளின் எல்லையை மீறக்கூடாது. இதைத் தாண்டி, நல்லாட்சிக்காக ஒவ்வொரு கிளையும் மற்ற கிளைகளுக்குச் துணைபுரிய வேண்டும்."
– Dr. Ashwani Kumar v Union of India and another [2019] 12 S.C.R. at p.44

மேலுள்ள கூற்றை விமர்சனமாக ஆய்வு செய்க, குறிப்பாக Charles Montesquieu என்பவரின் பாரம்பரிய வலுவேறாக்க கோட்பாட்டை மற்றும் இலங்கையின் 1978 அரசியலமைப்பை ஒப்பிட்டு விளக்குக.
உங்கள் விடையை அரசியலமைப்புப் பிரிவுகள், வழக்குத் தீர்ப்புகள், மற்றும் நவீன எடுத்துக்காட்டுகளுடன் ஆதரிக்க.

**(20 புள்ளிகள்)**

05. கொரதோட்ட அமிலா, ராகா அரசை சேர்ந்த ஒரு அமைப்பைச் சேர்ந்த குற்றவாளி, கொலை குற்றச்சாட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தான். 2025 பெப்ரவரி 28ஆம் தேதி மில்லிட்டவுன் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, நீதிமன்ற வளாகத்திற்குள் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியொருவரால் அவன் கொலை செய்யப்பட்டான்.

இந்த கொலையைத் தொடர்ந்து 12 மணி நேரங்களில், கொலை நடந்த இடத்திலிருந்து 120 கிலோமீட்டர் தொலைவில் போலீசாரால் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டான். சந்தேக நபரின் குற்றத்தன்மையைப் பற்றி விசாரிக்காமல் இக் கைது இடம் பெற்றது. போலீசார் அந்த நபர் ஓட்டிச் சென்ற வாகனத்தை சோதித்த போதும் எந்த சந்தேகத்திற்குரிய பொருள்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த சந்தேக நபர் காவல்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படாமல் நான்கு நாட்களுக்கு மேல் போலீஸ் காவலில் வைத்திருந்தனர். போலீஸ் காவலில் இருக்கும் போது, அவர் கடுமையாக வற்புறுத்தப்பட்டு, மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில், ராகா மாநிலத்தில் உள்ள ஊடகங்கள், காவலில் இருந்த சந்தேக நபர் விசாரணையின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியிட்டன.

இந்த நிகழ்வை கண்டித்து, ராகா சட்ட சங்கம் அறிக்கை வெளியிடப்பட்டது:

"சந்தேகநபர்களைத் தங்களுடைய காவலில் வைத்திருக்கும்போது அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வது போலீசாரின் மற்றும் அரசின் சட்டப்பூர்வமான பொறுப்பாகும். இருப்பினும், ஒருவர் குற்றம் செய்துள்ளதாக நம்பப்படுகிறதற்காகத் தண்டிக்கப்பட வேண்டியது, சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒரு தகுந்த நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்ட பின்னரே. இவ்வாறான நீதிமன்றத் தவிர்த்த கொலைகள் சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கைக்கு கடுமையான மீறல்களாகும்."

மேற்கண்ட கூற்றுக்களை கருத்தில் கொண்டு சட்டத்தின் ஆட்சி (Rule of Law) என்ற கொள்கையின் அடிப்படையில் இச் சந்தர்ப்பத்தை ஆய்வு செய்க.

ராகா அரசின் சட்டமும் அரசியலமைப்பும் இலங்கை சட்ட அமைப்புக்கு ஒப்பானது எனக் கருதவும். தீர்க்கப்பட்ட வழக்குகள், அரசியலமைப்பு பிரிவுகள் மற்றும் சமகால உதாரணங்களுடன் உங்கள் விடையை ஆதரிக்க.

**(20 புள்ளிகள்)**

06."நீதிமன்றங்கள் அவசியமாக பாராளுமன்றத்தின் கீழ்நிலையாக உள்ளன அல்லது அதற்குச் சார்ந்தவை. அவைகளுக்கு நீதித்துறை மறுஆய்வு செய்யும் அதிகாரம் இல்லாமல், பாராளுமன்ற சட்டங்களை பரிசீலனை செய்ய இயலாது. மேலும் எந்த நீதிமன்றமும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு முரணான தீர்ப்புகளை வழங்க முடியாது, ஏனெனில் அவை எப்போதும் அந்த சட்டங்களின்படி தீர்மானிக்க பிணைக்கப்பட்டுள்ளன."
'The Nature of Parliamentary Sovereignty v Constitutionalism' – Bernard Wolley.

இந்தக் கூற்றானது இலங்கையின் தற்போதைய அரசமைப்புச் சூழலில் பாராளுமன்ற இறைமைக்கான கோட்பாட்டின் நடைமுறையை பிரதிபலிக்கிறதா என்பதை விவாதிக்க. பொருத்தமான உறுப்புரிமை மற்றும் வழக்குச் சட்டங்கள் மூலம் உங்கள் பதிலை ஆதரிக்க.

**(20 புள்ளிகள்)**

07. ஐக்கிய நாடுகளின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (UNITAR) சார்பில் ஒரு சுயாதீன ஆராய்ச்சியாளராக, 2025–2030 காலக்கட்டத்திற்கான UNITAR இன் தாராளத் திட்டத்தைக் (Strategic Plan) தயாரிக்க உதவுவதற்காக சட்ட விமர்சன துணைக்குழுவால் உங்களிடம் கோரப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கையின் நீதித்துறை சுயாதீனத்துடன் (Independence of the Judiciary) தொடர்புடைய தற்போதைய சட்டமுறை அமைப்பைப் (existing legal framework) பார்வையிட்டு, எதிர்கால சட்டப் பணியமைப்பிற்கான (future legal reforms) வாய்ப்புகள் (prospects) மற்றும் சவால்கள் (challenges) என்னவென்பதை அடையாளம் காணுமாறு அவர்களால் நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளீர்கள்.

இருப்பினும், இந்த அறிக்கையில் சமகால வழக்குகள் (contemporary examples) மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு (case law) விசேட முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

அதற்கேற்ப ஒரு அறிக்கையைத் (Report) தயாரிக்க.

**(20 புள்ளிகள்)**

08. இவற்றில் எவையேனும் இரண்டின் மீது சிறுகுறிப்பு வரைக.

a) அரசின் வழிகாட்டும் கொள்கைகள்
b) Living constitution method of interpretation
c) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம்
d) டொனமூர் அரசியலமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் (1931)

**(10×2 = 20 புள்ளிகள்)**

****பதிப்புரிமை பெற்றது.****